ஓம்

தேசிய கீதம்

ார் பகவத்சிங் பாட்டு.

3 - A... 1981
O-,1x
N31
121204

உ

பாரதமாதா துணை.

தேசபக்தர்கள்

புகழ்ப்பெற்ற

சு. தேசரத்னமென்னும்

தேசீயகீதம்.

3 - AUG 1931

இஃது

முத்தமிழ்க்ஷேத்ரம்

மதுரகவி, V. நடராஜபிள்ளையவர்கள்,

இயற்றியது.

பதிப்பாளர்

M. பழனியாண்டி அன் கோ,

புத்தக வியாபாரம்,

புதுமண்டபம், மதுரை.

மதுரை, ராஜா பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

காப்பிரைட்.] 1931. [விலை அணா 2.

121204

உ

புதிய தேசீய கீதங்கள்.

ஜனகை மாநகர் கவிக்குஞ்சரம் அவர்கள் இயற்றிய நாட்டுத்திலகம் என்னும் ராட்டுப் பாட்டு விலை அணா 0—5—0

முத்தமிழ் க்ஷேத்ரம் V, நடராஜபிள்ளை அவர்கள்இயற்றிய வேதாரண்ய உப்புசத்தியாக்கிரக கீதம் என்னும் காங்கிரஸ் பாட்டு 0—2—0

ஷியார் பாடிய மதுரகானம் (பக்திரஸ கீர்த்தனை) விலை அணா 0—2—0

உ

குமரன்றுணை.

தேசபக்தர்கள் புகழ்ப்பெற்ற

"சுதேசரத்ன"மென்னும்

தேசீயகீதம்.

வெண்பா.

தேசத்தொண் டாற்றிடுந் தேசாபி மானிகள்மேல்
வாசத்தெய் வத்தமிழால் வாழ்த்துதற்குப்—பேசப்ர
மாதவத்தன் பெற்றதிரு மாமுகனை ருற்றமலர்ச்
சாதனத்தாற் சித்திவருந் தான்.

பாரதிதேவி வணக்கம்.

ஸ்ரீராமபாதமா-என்ற வர்ண மெட்டு.

இராகம்-அமிர்தவாகினி-தாளம்-ஆதி.

பல்லவி.

1. பாரததேவியே பாக்யசஞ்சீவியே
பரிவோ டருள்மேவியே (பா)

அநுபல்லவி.

சாரதி வாசமே சார்ந்த விலாசமே
சாலவேதந் தாளுங்கீதத் தத்துவப்ர காசமே (பா)

சரணம்.

தேவர்முனிவர் போற்றுந் தீனதயாபரி
சித்தமதனிற்குடி நத்துங்க்ருபாகரி
சேவித்தேன் பூரணி தேசியகாரணி
சீலன்நட ராஜன்போற்றும்
ஞாலபுக பூரணி (பா)

உலகம் போற்றும் உத்தமன்,

மகாத்மா காந்தி மகத்துவ கீதம்.

முருகனே கலியுகத்தினில்-என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

2. காந்தியே கலியுகத்தினிற்
கருணைக் கண்மணியாம் மஹாத்மா (கா)

அநுபல்லவி.

சாந்தியா மவர்சொல் வாக்யம்
தருமெனவரும் பெருநிதிதருங் (கா)

சரணம்.

கத்துகடற்றுயி லுற்றகாகுத்த
னுரைத்தருட்கீதையி னுட்பொருளாய்ந்தவர்
காட்சி மாட்சி யிதந்தரு
சூட்சி யாட்சி சுதந்தர
கதிபெறவொரு விதியெனவரு
கர்த்தன் பத்தன் நடராஜன்
அத்தன் சுத்தன் திடமுறுங் (கா)

மூர்த்தியாய் வந்துதித்த-என்ற மெட்டு.

இராகம்-மோகனகல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

3. முப்பத்துமூன்றுகோடி முதல்வனுங்காந்தி
காந்தி காந்தி காந்தி
செப்பவே யிந்தியர்க்கோர் தேசியசாந்தி
சாந்தி சாந்தி சாந்தி (முப்)

சரண (எடுப்பு)

உப்புச்சத்யாக்கிரக வுண்மைவழி தேர்ந்திடவே
ஒப்புஞ் சுயாட்சிபெற வுழைத்திடுந்திண்யன்
திண்யன் திண்யன் திண்யன் (முப்)

காருண்யமற்றவெள்ளைக் காரருக்கே யடிமைகொண்டு
சீரழிவானசெயல் தீர்த்திடும் புண்யன்
புண்யன் புண்யன் புண்யன் (முப்)

கராச்சிக் காங்கிரஸிற் கண்ணியமாய்த்தீர்மானங்கள்
தராதலம்-புகழத் தந்திடுங் கண்யன்
கண்யன் கண்யன் கண்யன் (முப்)

செந்தமிழ்க்கூடல்வளர் சேயன்விக்வநடராஜன்
பைந்தமிழ்க் கீதத்திற்கன் பானலா வண்யன்
வண்யன் வண்யன் வண்யன் (முப்)

சிங்காரி ஒய்யாரி-என்ற மெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

4. தெய்வீக சந்யாசி—இந்த
ஜெகத்தைப்புரக்கவந்த மகத்வக்ரு பைக்கடலெனுந் (தெய்)

மகுடம்.

ஜீவகா ருண்யமுற்ற
சேவைகொண் டகமகிழ்பெறு (தெய்)

செழிக்குஞ்சத் யாக்கிரக
வழிக்குஞ்சற் குருவெனவரு (தெய்)

சீலமிருந்ததிரி காலமுணர்ந்தபெரு
ஞாலமுகந்தமறை மூலமெனன்றுரைநவமணி (தெய்)

சித்தியளித்துயர் பத்திவிளைத்தியல்
கத்தர்விருத்தியில் நத்திய சுப (தெய்)

சரணம்.

சைவாகமானுஷ்டான சபர்மதி வாசன்
தன்னலங்கருதிடாத் தர்மோபதேசன்
வைபோகவாழ்க்கையுற்றே வளரும்ப்ரகாசன்
பனத்தழுக் கறுத்தவராம்—பொருள்மூன்றுள்ள
இனத்தையுபவெறுத்தவராம்—பெருமையில்லா
மடமைகருணத்தைவிட்டுக் சுடமைத்திறத்திலுற்று
திடமுறச்செய் நடராஜன்
செப்பிடு நற்பத மொப்பிய சித்த (தெய்)

—

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்.

காருண்ய காந்தியின், டாண்டி.

உப்புச் சத்யாக்ரக வுரிமைக் கீதம்.

நாசகாலதாசி-என்ற மெட்டு.

பல்லவி.

5. உப்புச் சட்டத்தினை மறுப்போம்—முறை
தப்புந் திட்டத்தினை வெறுப்போம்—மனம்

ஒப்பிக் கட்டத்தினைப் பொறுப்போம்—தவ
றுளக்குறும்பரின் வழக்கமுங்கெட (உப்)

தோகையரா.

ஒருகவளச் சோறேனும் பசியாறி மகிழ்ந்துய்ய
உப்பொன்று வேண்டு மென்றே
திருமனதி லெண்ணியே காந்தியும் டாண்டிக்குச்
சென்றதைத் தெரிந்தீ ரன்றே

ஷை பாட்டெடுப்பு.

கட்டுப்பட்டவ்வழி நடப்போம்—தவங்
கிட்டச்சிறைதனிற் கிடப்போம்—தினங் (கட்)

தோகையரா.

கடவுளாற் படைத்திட்ட கடலுள்ள வுப்பையுங்
கவருதற் குரிமை யில்லை
திடமான நன்றியாற் செய்யுவகை வேறென்ன
செப்பவோ மனமு மில்லை

ஷைபாட்டு.

நித்திரை நீங்கிக்கண் விழிப்போம்—ஜெகத்
சத்தியாற் றீச்செய லொழிப்போம்—நெடு (நித்)

தோகையரா.

நீதியுந் தர்மமுங் குறைபாத தொண்டினில்
நேர்மையா யொத்துழைப் போம்
சூதினை லேமாற்றி யாளினு மோர்கொடியிற்
சுயராஜ்யம் வரவ ழைப்போம்

ஷை பாட்டு.

சித்திர முத்தமிழ் க்ஷேத்ரம்—தேச
பத்தன் நடராஜன் தோத்ரம்—நேச (உப்)

பாரெல்லாம் புகழும் வீரத்தியாகனும்
சர்தார் பகத்சிங்
சாயுஜ்ய சந்ததச் செந்தமிழ்க் கீதம்.
புதிய பிளேட் பாட்டு.

கந்தா காருண்யனே-என்ற மெட்டு.

பல்லவி.

6. பகதூர் பகவத் சிங்கம் பக்திமான்கள் தங்கம்
சுகுணராம்கிருஷ்ண சிங்கம் சுதவேள்போ லங்கம்

தொகையரா.

பருவமோ இளமைதிரு மணமிலாக் குணவிஜபன்
பலகலையும் ஆய்ந்திட்டவன்
பவளமணி மாடங்கள் ஒளி வீசும் லாகூரில்
பாங்குடன் பிறந் திட்டவன்
உருவமோ மதன்போலே யுத்யோக மதைவெறுத்து
உண்மைகடைப் பிடித்திட்டவன்
உலகமதி லிந்தியர்கள் எந்நாளும் வாழ்ந்திட
உயிரையே கொடுத்திட்டவன்
பெருமைசால் காந்தியின் ஒத்துழைபாத் திட்டமதில்
உண்மையா யுழைத்திட்டவன்
பிதற்றிடும் வீணர்க்குத் தேசாபி மானத்தைப்
பிரசங்கஞ் செய் திட்டவன்
புரட்சியின் இயக்கமதில் சேர்ந்துதன் ஜென்மத்தைப்
புனிதமாய் பெற் றிட்டவன்
புதியதோர் சட்டசபை வெடிகுண்டு வழக்கினால்
புண்யசிறை புகுந்திட்டவன்

ஷை பாட்டேடுப்பு.

புகுந்தார்சிறை தனிலே
புரட்சிவாழ்க் கையிலே (பக)

தோகையரா.

அவசரச் சட்டத்தின் முறைமைபால் ஜட்ஜிகள்
அரியதோர் தீர்ப்புரைக்க
பவனியில் இருபது லட்சம்பேர் மகஜர்கள்
பாங்குடன் அனுப்பினர்கள்
கவலையால் தந்தையும் கதறிப்ப மனம் நொந்து
கண்ணீர்விட் டழுதுநிற்க
யுவராஜ சிங்கமொடு ராஜகுரு சுகதேவும்
ஓர்நொடியில் தூக்கில் மாண்டார்

பாட்டு

அந்தோயிது பாபமே   அனியாயச் சாபமே   (பக)

இராகம்-இந்துஸ்தான் காப்பி-தாளம்-ஆதி.
ஞானபண்டித மோதிலால்-என்றமெட்டு.

121204

பல்லவி.

7. பால்ய பகவத்ஸிங்   மாண்டனன்
பாஞ்சால   வீரன்   (பா)

சரணம்.

பால்ய பகவத்   சிங்கம்
பத்தரை மாற்றுத்   தங்கம்
வாலிபர் நாடிடுஞ்   சங்கம்-மதன் போல லங்கம் (பா)

வீரத்தியாக   மூர்த்தி
விண்பரவிடுங்   கீர்த்தி
தீரச்செயலின் நற்   கீர்த்தி-சிறந்தநேர்த்தி(பா)

முப்பத்தோ   ராண்டினிலே
முதன் மார்ச்சு   மாதத்திலே
செப்பிரு பத்து மூன்றிலே-ஜெகத்தின் மேலே (பா)

தூக்கில் மடிந்த தோஷம்
சும்மாபோகாது தேசம்
ஊக்கமாய்நிற்பீர்நன்னேசம்-உலேந்தால்மோசம் (பா)

பாண்டிநகரின் வாசன்
பாலனும்நட ராஜன்
வேண்டுஞ்சுதேசப்ர காசன்-வீரசமாஜன் (பா)

தேசப்பணித்திறங் கூறுதல்.

தாயிடத்தி லன்பில்லாத-என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்காப்பி-தாளம்-ஆதி.

8. தேசத்தொண்டு செய்திடாத ஜென்மம் வீணய்யா (தே)

அநுபல்லவி.

ஜென்மம் வீணய்யா உயர் கன்ம - மேனய்யா (தே)

சரணம்.

நாசமுற்ற கட்குடியை நாட்டமுடனே விலக்கி
வாசமுடனே யுலகில் வாழ்ந்திடவே (தே)

வேசமுற்ற மல்துணியை வீரமுடனே யொழித்து
தேசமக்கள் வறுமைநீங்கிச் சீரோங்கவே (தே)

சாதிமதப்பேய்பிடித்தே தர்க்கமிடும் பேதையரை
நீதிமந்த்ர போதத்தாலே நேராகவே (தே)

சீலமிகுங் காந்திமஹான் செப்புமொழி யோர்ந்திடுவீர்
பாலன்நட ராஜனகீதப் பண்காணவே (தே)

தேசீயக்கொடி வணக்கமும் சிறப்பும்.

இராகம்-புதிய பார்ஸி நோட்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

9. தேசியக் கொடி வணக்கந் தீரமாகச் செய்குவீர்
சித்தமா சகன்றுபாரிற் க்ஷேமமோடு உய்குவீர்

சிறுமை யோடுமே—இகழ்
வறுமை வாடுமே
தே-வேந்தபோக முற்றுநம்மை வந்துகூடுமே (தே)

தோகையரா.

தேசத்தின் மானமுஞ் சுயபரி யாதையுந்
தெரிவித்துக் காப்ப தின்றே
நேசத்தி யானமும மக்கள்தம அன்பையும்
நிலைபெறச் செய்யும நன்றே

ஷை பாட்டேடுப்பு.

பாரத மாதாகீ ஜே! ஜே!! யென்று பாடுவீர்
பாரிலுள்ள மக்கள்யாரு மொன்று கூடுவீர்
பலமுண் டாகுமே—நல்
வலமுண் டாகுமே
பாதகச் செயல்கள்யாவும் பறந்துபோகுமே (தே)

தோகையரா.

பாஞ்சால வீரனும் ஜெபதி ஜதீந்திரன்
பாபுசன் மூவ ரும்மே
தாஞ்சாக நேர்ந்ததைச் சாற்றவும் வேண்டுமோ
தாய்மணிக் கொடி யிதாமே

ஷை பாட்டு.

கூடல்மாநகரில்மேவுங் கோமகன்றன் பார்வையால்
கொண்டல்போற்பொழியும்நட ராஜன் கூறுஞ்சீர்மையால்
கொடியை யேற்றுவோம்—சாந்தி
அடியைப் போற்றுவோம் நாளுங்
கூடியே வந்தேமாதர கோஷம் வாழ்த்துவோம் (தே)

——

கட்குடியின் பயன் கழறுதல்.

மதுவிலக்கு மாண்மியம்

நாதசங்கீதப் பொன்-என்ற மெட்டு.
இராகம்-புன்னாகவராளி- தாளம்-ஆதி.

கண்ணிகள்

10. கோடிபொன் கொடுத்தாலுங் குடியாதீர்—கள்ளைக்
குடித்து யிவ்வுடல்நொந்து மடியாதீர்
பேடியென் றுலகினில் நடியாதீர்—உற்ற
பெருமையை யிழந்தகம் படியாதீர்
குறைவாகும்-என்றுங்-குறைவாகும்-நரகக்
குழியினிற் கொண்டுசேர்க்கு முறையாகும் (கோ)

அன்புள்ள பெண்டுபிள்ளை யலைந்திடுவார்—தெருவில்
ஆதரவானபந்து மலைந்திடுவார்
தென்புள்ள தோழர்களும் பிரிந்திடுவார்—மருவில்
சீரியர் கண்டுநகை புரிந்திடுவார்
அறிவீரே-நன்றாய்-அறிவீரே-குடியை
அடியோ டழித்துநெஞ்சம் மகிழ்வீரே (கோ)

தேடிய செல்வமெல்லாஞ் சிதறிடுமே—போதை
தெளிந்தபின் கண்டுமனம் பதறிடுமே
நாடிய மானமெல்லாம் நடந்திடுமே—தேகம்
நலியச்செய் ரோகமெங்கும் படர்ந்திடுமே
தியங்கிடுவீர்-நின்று-தியங்கிடுவீர்
சிரிப்பார் சிரித்திடவே மயங்கிடுவீர் (கோ)

கோர்ட்டுக் கிழுத்துநம்மைக் குடிகெடுக்கும்—சொல்லக்
கொடியதோர் தூக்கில்மாளும் படிவிடுக்கும்

223
167

தீர்க்கமாய்க் கடன்கொள்ள விடைகொடுக்கும்—சதா
தெருவினிற் றிரிந்திட நடையொடுக்கும்
குடியாதீர்-கள்ளைக்-குடியாதீர்-ஜீவன்
குடியிருந்தும் பிணம்போல் மடியாதீர் (கோ)

எத்தனை பேருவுரைத் துறந்தார்கள்—இங்கு
ஈடிலாச்சிறைதனில் நிறைந்தார்கள்
நத்தியபெண்டுபிள்ளை மறந்தார்கள்—இந்திய
நாடுசெழித்திடவே பறந்தார்கள்
நலம் பெறுவீர்-சுய-நலம் பெறுவீர்-வித்வ
நடராஜன் கீதாமிர்த நலம் பெறுவீர் (கோ)

கதரணிய வேண்டுமெனக் கழறுதல்.

பாடுங்கள் பாடுங்கள் பாடுங்களே-என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஏகம்.

பல்லவி.

11. கட்டுங்கள் கட்டுங்கள் கட்டுங்களே—கதர்
கட்டுங்கள் கட்டுங்கள் கட்டுங்களே (கட்)

அநுபல்லவி.

காந்திமஹான் வாக்கியமே
சாந்தியாகும் யோக்கியமே (கட்)

சரணம்.

மட்டிலா இந்திய மக்களுங்கோடி
மாறுமல் வாழ்பவ ரோசிலர்கூடி
தட்டியலையுந் தரித்திரர்நீடி
சங்கடமொ ழிந்திடவே
இங்கிதம்நி றைந்திடவே (கட்)

ஆண்டுகளேலாறும் அறுபதுகோடி
அந்நியநாட்டா ரடிக்கிறார்கூடி
மாண்டவர்போலே யிருப்பதோவாடி
மதிபெருகப் பதிவளரக்
கதிபரவத் துதிநிறையக் (கட்)

காலேவணங்கிக் கதறவுமாச்சு
கண்ணீர்விட்டாருயிர் மாய்க்கவுமாச்சு
வேலைசூழ் மண்மீது வெற்றியின்பேச்சு
விண்டிடவே கண்டிடுவீர்
மண்டலமுங் கொண்டிடுவீர்

சீர்கெட்ட சீமைத் துணிகளைப்போக்கி
செல்வச் சிறப்புற்ற கத்தருண்டாக்கி
பேர்பெற்ற காங்க்ரஸ் பெருமையைநோக்கி
பிதற்ற லொழித்து
மனத்திற் களித்துக் (கட்)

—

கதரணிய வற்புறுத்திக் கூறல்.

இந்து நேசரே-என்ற-வர்ண மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

12. மானமில்லையா சொந்த
ஞானமில்லையா இன்னும் (மா)

அநுபல்லவி

தானமதி லேசிறந்த தாய்நாட்டுக் கதரைவிட்டு
ஈனமிகு மல்துணியை யின்பமுடனேயுடுத்த (மா)

பீகார்மாகாணத்திலே பெருமையுற்ற சோதரிகள்
ஏகிடவேவெளியிலென்று விருவருக்குமோருடைதான் (மா)

அறுபது கோடிரூபாய் அந்நிய நாடுசென்றே
வறுமையுண்டாக்கியின்னும் மாறாமல் வாழ்ந்திருக்க (மா)

உண்ணாவிரதத்தையும் உயிரைக்கொடுககதையும்
கண்ணாரப் பார்த்திருந்தும் கதரணியாதிருப்பதற்கு (மா)

முப்பத்து மூன்றுகோடி முதல்வனுங் காந்திமஹான்
செப்பிடும்வார்த்தைகேட்டுஞ் சித்தமிசை யாதிருக்க (மா)

தேவாதி தேவர்புகழ் தென்மதுரை க்ஷேத்திரத்தில்
நாவாரப்பாடும் நட ராஜன்கீத முரசடித்தும் (மா)

எல்லைப்புற காந்தி" யென்னும் கபர்கான் தன்மைத்திறங் கூறுதல்.

கண்ணபிரானென்னவே-என்ற மெட்டு.

கண்ணிகள்.

13. எல்லைப்புற காந்தியென்னும் ஈடில்லா சாந்தமிகு—புகழ்
நாயகவிவேகி—உயர்
இந்தியாவின் முஸ்லீம்களி லேற்றமோர் தியாகி (எல்)

கராச்சிக் காங்கிரஸில் தலைவர்களுங்காண—தொண்டர்
படையுடனே தோன்ற—வந்த
காருண்யமிகுந்தசீமான் கருத்திலன்புகாண (எல்)

அஹிம்ஸா தர்மமதை யகமதனிற்கண்டார்—காந்தி
வகையிற்சேர்ந்து கொண்டார்—மக்கள்
ஆதரவாயுய்வதற்கிங் கரியமொழிகள்விண்டார் (எல்)

பாண்டிநகரில்வளர் பாலன் நடராஜன்—கீத
லோலனும் நன்னேசன்—நீத
பாரத மாதாவின்பக்தி பரவிடும்ப்ரகாசன் (எல்)

121204

சுயராஜ்ய நலங்கூறுதல்.

அதிர்ஷ்டம் வந்திட்டவுடன்-என்ற மெட்டு.
இராகம்-இந்துஸ்தான் காப்பி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

14. சுயராஜ்யம் பெற்றவுடன் சுகம்பெறலாமே
துயர்தருங்கட்குடியுந் தொலைந்துடன் போமே
அயராதகைத்தொழில்கள் அளவின்றியாமே
அறநெறிதுலங்கவே யகங்களிப்போமே (சுய)

தோகையரா.

சன்மார்க்க நெறியுடன் பொதுஜனத் திருப்திக்குந்
தடையிலாக் கொள்கை யாலே
துன்மார்க்கம் நீங்கிய மதங்களைப் பின்பற்ற
சுதந்திர முண்டு மேலே

ஷை பாட்டேடப்பு.

பேர்பெற்ற ஜாதிமதப் பெருமையிராதே
பிறப்பெலாமொன்றென்று பேசத்தப்பாதே
சீர்பெற்ற கோவிற்குளந் தீண்டல்வாராதே
சிறக்குமாரம்பக்கல்வி செலவைத்தாராதே (சுய)

தோகையரா.

தொழிலாளரடிமையும ராணுவப் பூதமுந்
துரிதமாய்த் தொலைந்து போமே
இழிவான பாஷையும அநியாயச் சட்டமும்
இடமிலா தலைந்து போமே

ஷை பாட்டு.

தண்டவரிகளெல்லாந் தவிடாகி விடுமே
தையலாடவரென்ற தருக்கமுங் கெடுமே
கண்டதிற் பாதிவட்டி கண்கலங் கிடுமே
கவர்மெண்டு சம்பளமுங் கணிதமேற் படுமே (சுய)

முற்றிற்று.

வந்து விட்டது!　　உ　　வந்து விட்டது!!

புதிய தேசீய கீதங்கள்.

முத்தமிழ் க்ஷேத்ரம் மதுரகவி V. நடராஜபிள்ளை அவர்கள் பாடிய வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரக கீதம் என்னும் காங்கிரஸ் பாட்டு	விலை அணா	0	2	0
ஷேயார் பாடிய மதுரகானம் பக்திரசக் கீர்த்தனை	விலை அணா	0	2	0
கவிக்குஞ்சரம் அவர்கள் பாடிய நாட்டுத் திலகம் என்னும் ராட்டுப்பாட்டு	விலை அணா	0	5	0
S. V. சுப்பையா பாகவதர் அவர்கள் பாடிய பூங்காவிநோத சிங்காரப்பாட்டு 1, 2		0	2	0
மதுரை பபூன் N. S. ஷண்முகம் அவர்கள் பாடிய புதியபபூன் பாட்டு 1, 2	விலை	0	2	0
மதுரை T. K. சுந்தரம் அவர்கள் பாடிய பக்திரசக் கீர்த்தனை 1, 2 பாகம்	விலை	0	5	0
உபாத்தியாயர் அன்னியில் சங்கீதம் கற்றுக்கொள்ளும் ஆர்மோனிய அனுபவ சங்கீத ரத்தினம்	விலை	1	0	0
சங்கீத வித்வான் அனந்தராம் பாகவதர் அவர்களால் ஸ்வரங்கள் அமைக்கப் பெற்ற தியாகராஜ சங்கீத ஸ்வரஹாகித்யம்	விலை	1	8	0

மேற்கண்ட புத்தகங்களும் மாணவர்களுக்குவேண்டிய ஸ்கூல் புத்தகங்களும் இன்னும் இதர புராண இதிகாச புத்தகங்களும் எங்களிடம் மொத்தமாகவும் சில்லரையாகவும் நேரிலும் V. P. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். எமது விலாசம்

M. பழனியாண்டி அன்கோ,

புத்தகவியாபாரம், புதுமண்டபம்,

மதுரை.